மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# திருவாசகம் காட்டும் திருவிளையாடல்கள்

**முனைவர் ச.பர்வத கிருஷ்ணம்மாள்**
தமிழ்த்துறைத் தலைவர்,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, திருநெல்வேலி

**முன்னுரை**

தமிழர்களின் சமயப் பண்பாட்டில் இறைவழிபாடு இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது. மக்களை இறைவழிபாட்டில் ஈடுபடுத்தி அவர்தம் மனத்தைப் பண்படுத்தவே தமிழில் சமய இலக்கியங்கள் படைக்கப்பட்டன. சமய இலக்கியங்கள் அவ்வச்சமயம் சார்ந்த மக்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு சமயமும் தத்தம் கடவுளரின் அற்புதத் திருவிளையாடல்களை மையப்படுத்தி, பல்வேறு இலக்கியங்களில் அவற்றைக் காட்சிப்படுத்தியுள்ளன. அத்தகு திருவிளையாடல்கள் சிலவற்றைச் சைவ இலக்கியங்களுள் ஒன்றான திருவாசகத்தின் வழி இக்கட்டுரையில் காணலாம்.

**திருவாசகம்**

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. அவற்றுள் எட்டாம் திருமுறையாக அமைவது மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகம். தில்லை நடராசப் பெருமான், "நீர் பாடும் நான் எழுதுவேன்" என்று ஆணையிட மாணிக்கவாசகரால் எழுதப்பட்டதே திருவாசகம். மாணிக்கவாசகர் பெற்ற

இறையனுபவத்தின் வெளிப்பாடே திருவாசகமாய் உருப்பெற்று நிற்கின்றது எங்கும் எல்லாமாய் நிறைந்து விளங்கும் சிவபெருமானைப் போற்றியும் புகழ்ந்தும் பாடிய மாணிக்கவாசகர், சிவபெருமான் செய்த திருவிளையாடல்களைத் தம் விளையாட்டுப் பாடல்களில் ஆங்காங்கே சொல்லிச் செல்கின்றார்.

**திருவாசகத்தில் விளையாட்டுப் பாடல்கள்**

திருவாசகத்தில் சிவபுராணம் முதல் அச்சோப் பதிகம் ஈறாக 51 பதிகங்கள் உள்ளன. அவற்றுள் திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல் ஆகிய பத்துப் பதிகங்கள் மட்டுமே விளையாட்டுப் பாடல்களாக - மகளிர் விளையாட்டுப் பாடல்களாக - அமைகின்றன.

இம்மகளிர் விளையாட்டுப் பாடல்கள், பெண்கள் விளையாடும்போது, சிவபெருமானின் உருவத்தை வர்ணித்தும, அவனது திருவடிகளைப் புகழ்ந்து போற்றியும் பாடிக்கொண்டே விளையாடுவதாக அமைந்துள்ளன. அப்பாடல்கள்வழி, உலக உயிர்களைப் பாதுகாக்கவும், நன்னெறிப்படுத்தவும் சிவபெருமான் செய்த திருவிளையாடல்களை நாம் அறியலாகின்றது.

**விளையாட்டுப் பாடல்கள் காட்டும் திருவிளையாடல்கள்**

அடிமுடி அறியவொண்ணா அண்ணாமலையான்

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி" (பாவை :1)

என்று பிறப்பு, இறப்பு இல்லாத சிவபெருமானைப் பாடி முதல் விளையாட்டுப் பாடலைத் துவங்குகின்றார் மணிவாசகர். ஆதியும் அந்தமும் இல்லாத சுயம்பு மூர்த்தியான சிவபெருமான்,

"செங்கண் நெடுமாலும் சென்றிடந்தும் காண்பரிய
பொங்கு மலர்ப் பாதம்" (அம்மானை :1)

உடையவனாம். இதனை,

"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடி" (தெள்ளேணம் :1)

"அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி நின்ற சிவம்" (தெள்ளேணம் :3)

"அலரவனும் மாலவனும் அறியாமே அழல்உருவாய்" (சாழல் :6)

"பிரமன் அரிஎன்ற இருவருந்தம் பேதைமையால்
பரமம்யாம் பரமம் என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனார் அழல் உருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா தோள் நோக்கம் ஆடாமோ" (தோணோக்கம் :12)

என்னும் அடிகளிலும் மாணிக்கவாசகர் எடுத்துரைக்கின்றார்.

ஒருமுறை பிரம்மாவும், திருமாலும் தாமே பெரியவர் என்று சண்டையிட்டுக் கொண்டு இருந்தனர். அதனை அறிந்த சிவபெருமான் நெருப்புப் பிழம்பாகத் தோன்றி, தனது திருவடியையோ அல்லது முடியையோ முதலில் கண்டுவருபவர் எவரோ அவரே பெரியவர் என்று கூறினார்.பிரம்மன் தனது வாகனமான அன்னப்பறவையின் வடிவெடுத்து,

கங்கைவாழ் சடையினைக் காணச்சென்றார். செல்லும்வழியில் தாழம்பூவைக் கண்டார். அது பிரம்மாவைக் கண்டு வணங்க, பிரம்மா, அதனிடம், ”நீ எங்கிருந்து வருகிறாய்” எனக் கேட்டார். அது, தான் பெருமானின் முடியிலிருந்து இறங்கி வருவதாகக் கூறியது. சிந்தித்தார் பிரம்மா. “தலையில் சூடும் பூவைக் கண்டால் முடியைக் கண்டதாகத் தானே பொருள்” என எண்ணினார். உடனே அவர் தாழம்பூவிடம், ”நான் பெருமானின் திருமுடியைக் கண்டு வந்ததாக நீ சாட்சி சொல்ல வேண்டும்” என்று வேண்டினார். மறுத்துப் பார்த்த தாழம்பூ, இறுதியில் ஒப்புக் கொண்டது. திருமாலோ வராக அவதாரம் எடுத்து பூமியைக் குடைந்து சென்றார். பல்லாண்டுகள் பயணம் செய்தும் சிவபெருமானின் திருவடியைக் காண இயலாது திரும்பினார் திருமால். பிரம்மாவோ தாழம்பூவைச் சாட்சியாக வைத்துக்கொண்டு, பெருமானின் திருமுடியைக் கண்டதாகப் பொய் கூறி, தாமே பெரியவர் என இறுமாப்புக் கொண்டார். இதனை அறிந்த, அழல் உருவான சிவ பெருமான் பிரம்மாவிற்குத் தனி ஆலயங்கள் இல்லாமல் போகவும், பொய்ச்சாட்சி கூறிய தாழம்பூவைப் பூசைப் பொருட்களில் இருந்து விலக்கி வைப்பதாகவும் சாபமிட்டார். இங்ஙனம் இறைவன் அழல் உருவாய்க் காட்சி அளித்த தலமே திருவண்ணாமலைத் தலமாகும்.

இன்றும் சிவாலயங்களில், கருவறையின் பின்புறம் உள்ள லிங்கோற்பவரின் உருவத்தில் அன்னப் பறவையின் உருவமும், வராகத்தின் உருவமும் பொறிக்கப் பட்டிருப்பதே இதற்குச் சான்றாகும். மேலும் பிரம்மாவிற்கு எனக் கோயில்களும் அமைக்கப்படவில்லை. கோவில்களில் பூஜைக்கு உகந்த பூக்களில் தாழம்பூவும் இடம்பெறுவதில்லை.

பொய்யுரைப்பதும், பொய்ச் சாட்சி கூறுவதும் விலக்கப்பட வேண்டிய அதர்மங்கள் என்பதைப் பெருமானின் இந்தத் திருவிளையாடல் உலகிற்கு உணர்த்துகின்றது.

**கறைமிடற்று அண்ணல்**

“தனக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே” (புறம் : 182)

இவ்வுலகம் நிலைபெற்று நிற்கின்றது என்று இளம்பெருவழுதி கூறியதற்கொப்ப, இவ்வுலக உயிர்களுக்காகத் தன் உயிரையும் பொருட்படுத்தாது, நஞ்சுண்ட இறைவனின் பெருமையை,

“கோலாலம் ஆகிக்குரை கடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான்” (திருச்சாழல் : 8)
“காரார் கடல் நஞ்சை உண்டுகந்த காபாலி” (பூவல்லி :10)
“நெடுங்கடல் ஆலாலம் அமுதுசெய்ய
போனகம் ஆனவா” (பூவல்லி : 12)
“நஞ்சமர் கண்டத்தன்” (பொன்னூசல் : 4)

என்று மணிவாசகர் விவரிக்கின்றார். அமிழ்தம் எடுப்பதற்காகத் தேவாசுரர்கள் மந்தரமலையை மத்தாகவும், வாசுகிப் பாம்பை நாணாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தபோது வாசுகிப் பாம்பானது விஷத்தைக் கக்க, வெப்பம் தாங்காத தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைவதை நிறுத்திவிட்டு ஓட,உலக உயிர்களைக் காப்பதற்காக

நஞ்சை உண்டார் பெருமான். பயம் கொண்ட பார்வதிதேவி, விடமானது உடல் முழுதும் பரவாதிருக்க, இறைவன் கழுத்தை அழுத்திப்பிடிக்க, விடம் அங்கேயே தங்க, நீலகண்டனாகக் காட்சியளிக்கின்றானாம் சிவபெருமான். இத்திருவிளையாடல் பிறருக்காக வாழ்வதே வாழ்க்கை என்னும் கருத்தை நிலைநாட்டுகின்றது.

**மாதொருபாகத்தான்**

சக்தியை வணங்காது சிவனை மட்டுமே வணங்கிய பிருங்கி முனிவருக்கு, "சக்தி இல்லையேல் சிவமில்லை" என்பதை உணர்த்துவதற்காகவே, பார்வதி தேவியைக் கோபமுறச் செய்து, முனிவரிடமிருந்த சக்தியை இழக்கச் செய்து, பின் பார்வதி தேவியைத் தன் உடலின் ஒரு பாகமாக ஏற்றுக்கொண்டான் சிவபெருமான். பெண் இல்லாமல் ஆண் தனித்து வாழ இயலாது ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமுடையவர்கள் என்னும் இக்கருத்தை உணர்த்த எண்ணிய மணிவாசகர்,

"கிளிவந்த இன்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை" (அம்மானை : 18)
"மாதிருக்கும் பாதியனை" (அம்மானை : 7)
"பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன்" (அம்மானை : 8)
"………. ……….. ………. அவனியின்மேல்,
மங்கைதன் பங்கொடும் வந்து ஆண்ட திறம்" (தெள்ளேணம் :6)
"பெண்பால் உகந்தான்" (சாழல் : 9)

என்று கூறிப் பெண்கள் விளையாடுவதாகக் காட்டுகின்றார்.

**கிழவிக்கு அருளியது**

எளியவர்க்கு இரங்கி அருள் செய்யும் அவனது அருளிச் செயல்களை,

"மண்சுமந்த கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதும்காண் அம்மானாய்" (அம்மானை : 8)
"………… மதுரையில் பிட்டமுது செய்தருளி,
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட,
புண்பாடல் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ" (பூவல்லி :16)

என்னும் பாடல் வரிகளில் குறிப்பிடுகின்றார் மாணிக்கவாசகர். இங்கு வந்தி எனும் மூதாட்டியின் மூலம் பாண்டிய மன்னனுக்கு அறிவுறுத்துவதுபோல் கதியிழந்துநின்ற தன்னை நெறிப்படுத்திய திருவிளையாடலை மிகவும் நெகிழ்ச்சியோடு கூறுகின்றார்.

மதுரை வைகையாற்றில் ஏற்பட்ட வெள்ளத்தைக் கட்டுப்படுத்த, வீட்டுக்கு ஒருவரைக் கரையை அடைக்கும் பணியில் ஈடுபடுத்தினான் பாண்டிய மன்னன். வந்தி என்னும் ஒரு பிட்டு வாணிச்சி முதுமையினால் பணிசெய்ய இயலாது வருந்தினாள். சிவபெருமான் இளைஞனாக வந்து, தான் வந்திக்கு உதவுவதாகக் கூறி, கூலியாகப் பிட்டினைப் பெற்றுக் கொண்டான். கரையை அடைக்காது, பிட்டை மட்டும் உண்டுவிட்டு, ஆடிப் பாடிக் கொண்டு இருந்த இளைஞனை விசாரித்த அரசன், பிரம்பால் இளைஞனின் முதுகில் அடிக்க, அந்த அடி அரசன் உள்ளிட்ட உலகமக்கள் எல்லார்மீதும் பட்டது. வந்தவன் இறைவனே என்பதை உணர்ந்தான் மன்னன். தன் அடியவருக்காகப் பிரம்படி பட்ட

இத்திருவிளையாடல், சிவபெருமான் அடியார்களின் துயர் துடைத்து அருளும் நிலையைக் காட்சிப்படுத்துகின்றது.

**முடிவுரை**

இங்ஙனம் சிவபெருமான் உமா தேவியோடு இணைந்து மாதொருபாகனாய் அர்த்தநாரியாய்க் காட்சியளித்தது, பிரம்மனின் செருக்கை அடக்க அவனது ஒரு தலையை அரிந்தது, காலனைக் காலால் உதைத்தது, நரியைப் பரியாக்கியது, ஆலின் கீழிருந்து அறம் உரைத்தது, திரிபுரங்களையும் ஒரே அம்பினால் அழித்தது போன்ற பல திருவிளையாடல்களை நிகழ்த்திக்காட்டி சிவபெருமான் உலக உயிர்களை நல்வழிப்படுத்திச்செல்லும் தகைமையைத் திருவாசக மகளிர் விளையாட்டுப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

**பார்வை நூல்கள்**


- மாணிக்கவாசகர், திருவாசகம், கா.சுப்பிரமணியபிள்ளை, (உ.ஆ.), தமிழ் நிலையம், சென்னை 2008.
- ஈசுவர பிள்ளை. தா., பண்பாட்டு நோக்கில் திருமுறைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2008.
- கண்ணாயிரம். சி.சு., திருவாசகம் விளக்கவுரை, (சிவக்குடில் விளக்கம்), ஸ்ரீ சித்தர் பாடசாலை வெளியீடு.
- திருவாசகமாலை, சிவசெல்வராஜ், தங்கஜோதி ஞானசபை, சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், கன்னியாகுமரி, 2011.
- ஞானசம்பந்தன்.அ.ச., திருவாசகம் சில சிந்தனைகள்-2, கங்கை புத்தக நிலையம், 1999.